பாரதிதாசன் பல்கலைக்கழகம்

*(Re-accredited with "A" Grade by NAAC)*

திருச்சிராப்பள்ளி – 620 024


முனைவர் க. துரையரசன், எம்.ஏ, எம்.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.,
தேர்வு நெறியாளர்

தொலைபேசி : 0431-2407016, 2407060
தொலைநகலி : 0431-2407444
மின்னஞ்சல் : coe@bdu.ac.in
வலைதளம் : www.bdu.ac.in


---

ந.க.எண்.பட்டப்படிப்பு தேர்வுகள்/ ஏப்ரல் 2019 நாள்: 20.02.2019

பெறுநர்

முதல்வர்

இணைவு பெற்ற தன்னாட்சி அல்லாத அனைத்துக் கல்லூரிகள்

அய்யா/அம்மையீர்,

பொருள்: ஏப்ரல் 2019-ல் நடைபெறவிருக்கும் பல்கலைக்கழக இளநிலைத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் தேர்வுகள் துவங்கும் நாள் - தெரிவித்தல் - தொடர்பாக.

- - -

ஏப்ரல் 2019-ல் நடைபெறவிருக்கும் பல்கலைக்கழக இளநிலைத் தேர்விற்குப் பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்களைப் பெறுவதற்குரிய கடைசி நாள் மற்றும் தேர்வுகள் துவங்கும் நாள் ஆகியவை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **தண்டத் தொகையின்றி மாணவர்களிடமிருந்து பெறுவதற்கு** | : 06-03-2019 (புதன்கிழமை) |
| **தண்டத் தொகையின்றி பெறப்பட்ட விண்ணப்பங்கள் கல்லூரி வாயிலாக பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள்** | : 08-03-2019 (வெள்ளிக்கிழமை) |
| **தண்டத் தொகையுடன் மாணவர்களிடமிருந்து பெறுவதற்கு** | : 13-03-2019 (புதன்கிழமை) |
| **தண்டத் தொகையுடன் பெறப்பட்ட விண்ணப்பங்கள் கல்லூரி வாயிலாக பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள்** | : 15-03-2019 (வெள்ளிக்கிழமை) |
| **இளநிலைப் பருவத்தேர்விற்கான எழுத்துத்தேர்வுகள் துவங்கும் நாள்** | : 15-04-2019 (திங்கட்கிழமை) |

மேற்கண்ட தகவலை மாணவர்களும், மற்றும் ஆசிரியர்களும் தெரிந்துகொள்ளும் வகையில் கல்லூரி அறிவிப்புப் பலகையில் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

90 நாட்கள் கல்லூரி இயங்கியதற்குரிய சான்றிதழைத் தேர்வு துவங்குவதற்குப் பத்து நாட்கள் முன்னதாகப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கல்லூரி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இளநிலைப் பாடப்பிரிவுகளுக்கான தேர்வு விண்ணப்பங்களைப் பாடவாரியாக (B.A., B.Sc., B.Com., B.Litt., BBA.,etc..) தேர்வுக் கட்டண விவரங்களுடன் **(இறுதிப் பருவத் தேர்வு எழுதும் மாணவர்கள் பட்டச் சான்றிதழுக்கான கட்டணத் தொகை ரூ.800/-யும் சேர்த்து)** இணையதளம் வழியாக செலுத்தப்பட்ட E-ரசீதுடன தனித்தனியாக இணைப்பில் கண்ட படிவத்தில் கண்டிப்பாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. (Details of Examination Fee Paid Particulars Form – Downloadable from University Website) அவ்வாறு தேர்வு கட்டண விவரப்பட்டியல் இல்லாத E-ரசீதுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என கனிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மீளப்பயிலுதல் (Redo), மறுசேர்க்கை (Re-admission) மற்றும் மாற்றுச் சேர்க்கை (Transfer Admission) என்பது தேர்வு கட்டண சுருக்கப்பட்டியலில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மேற்கண்ட சேர்க்கைகளுக்காகப் பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட ஆணையின் நகலை இணைத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் அனைத்தும் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேரவேண்டிய மேற்குறிப்பிட்ட நாளுக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இதில் ஏற்படும் வழுவல்களுக்குப் பல்கலைக்கழகம் பொறுப்பேற்காது.

இக்கடிதம் கிடைக்கப்பெற்றமைக்கு ஒப்புகை அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

20/2/19

தேர்வு நெறியாளர்

குறிப்பு: பல்கலைக்கழகத் தேர்வுகள் தொடர்பான தகவல்களைப் பல்கலைக்கழக இணைய தளத்தில் (Website) அவ்வப்பொழுது பார்த்துத் தெரிந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. (www.bdu.ac.in)

**BHARATHIDASAN UNIVERSITY, TIRUCHIRAPPALLI-620 024**

EXAMINATION SECTION

UG - UNIVERSITY EXAMINATION - NOVEMBER / APRIL ........................

**DETAILS OF EXAMINATION FEE PAID PARTICULARS FORM**

Name of the College:

Centre Code :............ Class : I / II / III year Course: ............ Major:.................................. Semester: ............

| SL. NO. | Register No. | Name of the Student | Subject Code of Current Papers | Subject Code of Arrear Papers | Specify Re-do, Re-Admn., Transfer Admn. (if any) | NO. OF CURRENT PAPERS | | NO. OF ARREAR PAPERS, IF ANY | | TOTAL NO. OF THEORY PAPERS | TOTAL NO. OF PRACT. PAPERS | FEE FOR APPLN. / PROCESSING (50) AND MARKS STATEMENT (100) | FEE FOR THEORY PAPERS (Rs.75/- each ) | FEE FOR PRACTICAL PAPERS (Rs.100 / 200/- each) | FEE FOR CMS (200), PC (200) | CONVOCATION FEE (Rs.800/-) | LATE FEE (FINE) (Rs.300) If any. | TOTAL AMOUNT (13+14+15+ 16+17+18) | REMARKS |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | T | P | T | P | | | Rs.150/- | | | Rs.400/- | | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) | (20) |
| | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |

Note: T - Theory, P - Practical / Project Work

CMS - Consolidated Marks Statement, PC - Provisional Certificate, Convocation Fee to be collected from the Outgoing Students (in VI Semester) Only.